Brilliant College of Arts and Science for Women
பிரிலியண்ட் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு - 614715



திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் ஆயிரக்கணக்கான பி.எட் பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்கிய கல்வியியல் கல்லூரி, *2025*ம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசின் அங்கிகாரம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்று, புதிய மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கியுள்ளது. *AI, Robotics, Data Analyst, Data Scientist* போன்ற அதிக ஊதியம் வாங்கும் வேலைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்யும் பெருமைக்குரிய கல்லூரி.

## Courses Offered:

- B.A. Tamil
- B.Com. General
- B.Sc. Zoology
- B.Sc. Computer Science
- B.Sc. Artificial Intelligence & ML



**B.Ed.**
(2 years Regular course)

**B.Sc. B.Ed.**
(4-year Integrated Course)

✓ 10+ Years of Excellence
✓ 1000+ Successful Graduates
✓ Women's Safety & Support Cell

*The Right Place to Achieve Your Dreams – BRILLIANT!*

தமிழ்ச்சுரபி பதிப்பகம்


விலை:200/-

பழந்தமிழர்களின் தொழில்நுட்பச் சிந்தனைகள்

# பழந்தமிழர்களின் தொழில்நுட்பச் சிந்தனைகள்

(தொகுதி-3)

தமிழ்ச்சுரபி பதிப்பகமும் & SA பதிப்பகம் இணைந்து நடத்திய பன்னாட்டு கருத்தரங்கம்



தொகுப்பாசிரியர்கள்
முதுமுனைவர். இரா. புவனேஸ்வரி
முனைவர். ச. பிரவீன்குமார்
முனைவர். ஏ. கோதண்டராமன்

# பழந்தமிழர்களின்
# தொழில்நுட்பச் சிந்தனைகள்

**(தொகுதி 3)**

*தமிழ்ச்சுரபி பதிப்பகமும் எஸ்.எ பதிப்பகமும் இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்*


***தொகுப்பாசிரியர்கள்***

**முனைவர் இரா. புவனேஸ்வரி**

அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி
மேல்பாக்கம், திண்டிவனம் – 604 307.

**முனைவர் ச. பிரவின்குமார்**

உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை (H&S)
ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி,
சென்னை – 44.

**முனைவர். ஏ. கோதண்டராமன்**

இணைப் பேராசிரியர் & ஒருங்கிணைப்பாளர் தமிழ்த்துறை
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி (சுழல் – 2)
மீனம்பாக்கம், சென்னை – 600 061.



**தமிழ்ச்சுரபி பதிப்பகம்**

51/24 ஈஸ்வரதாஸ் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600005
தொடர்புக்கு: 7904033924
மின்னஞ்சல்: thamizhsurabi@gmail.com

# பொருளடக்கம்


1. பழந்தமிழரின் கப்பற் கலை 9
**முனைவர் இரா. புவனேஸ்வரி**
2. புறநானூற்றில் நீர் மேலாண்மை 16
**முனைவர் ச.பிரவின்குமார்**
3. தமிழ்ச் செவ்விலக்கியங்களில் தொழில் நுட்பம் 20
**முனைவர் ஏ. கோதண்டராமன்**
4. பாசனத் தொழில்நுட்பம் – முன் நகர்தலை நோக்கிய பயணம் 35
**முனைவர் த. பூவை சுப்பிரமணியன்**
5. தமிழர் பண்பாட்டில் சமூக மேம்பாடு 40
**இரா. சீமா**
6. இணையதள வளர்ச்சியும், தமிழ் – மின்னூல் பதிப்பு முயற்சியும் 48
**முனைவர் கி. அன்பு**
7. சிலப்பதிகாரத்தில் கட்டடக்கலை 58
**முனைவர் செ. சத்யா,**
8. சங்ககாலத் தமிழர் கட்டிடக்கலை: வாழ்வியலும் கலைநயமும் 68
**திருமதி த.அமுதா,**
9. தலைப்பு: பண்டைய தமிழரின் கடல்வழிப் போக்குவரத்து 79
**முனைவர் வீ.அன்னபூரணி,**
10. ஓடு உற்பத்தித் தொழிலாளர்களின் தொழில்நுட்பச் சார்பும், வாழ்வியல் விழுமியங்களும் – கள ஆய்வு 89
**செ.பினோ[1], முனைவர்.சி.வைலா பேபி[2]**





11. பழந்தமிழரின் தொழில்நுட்பச் சிந்தனை: 95
**எந்திரம் (எந்திரப் பாவை) முனைவர் சோ. ராஜலட்சுமி**
12. பரதவர் வாழ்வியல் காட்டும் தொழில்நுட்பங்கள் 99
**முதுமுனைவர் அ.இராஜலட்சுமி**
13. பழந்தமிழ் இலக்கியத்தில் தொழில்நுட்பச் சிந்தனைகள் 109
**ச.விஜயலட்சுமி**
14. பழந்தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை 115
**முனைவர். ஜெ. அருள் இருதய ஜெயந்தி,**
**திருமதி. பா. நந்தினி**
15. சங்க இலக்கியத்தில் சொல்வழித் தொடர்பு 121
**முனைவர் மு. காமராஜ்,**
16. தமிழக அகழாய்வுகள் காட்டும் தமிழர் பண்பாடு 129
**முனைவர் சு. செல்வக்குமார்**
17. சங்ககால மக்களின் வாணிபம் முறைகள் 137
**முனைவர் ம.காயத்ரி**
18. நாணயங்களில் எழுத்துப் பொறிப்புகள் 146
**முனைவர் ம. சந்திரசேகரன்**
19. தமிழரின் தொழில்நுட்பத்தில் கட்டடக்கலை 152
**முனைவர். பா. சாதிக்பாஷா**
20. பழந்தமிழ் சங்க இலக்கியத்தில் வேளாண்மை ஓர் கண்ணோட்டம் 161
**செல்வி.நவமணி ஆரணிகா** B.F.A
21. நுண்கலைகள் 167
**பரமேஸ்வரன் றொஷாந்த**

செய்துள்ளனர். இதுவரை மொத்தம் 5,000–க்கும் மேற்பட்ட பல்வகை மணிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் பச்சை வண்ண மணிகளும், கார்னீலியம், அகேட், அமெதிஸ்ட் போன்ற அரிய கல் மணிகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை இன்றைய குஜராத், மஹாராஷ்டிர மாநிலங்களிலிருந்து தருவிக்கப்பட்டவையாக இருக்கக்கூடும். அகேட், கார்னீலியன் மணிகளில் சிறப்பானதாகக் கருதப்படும் பீப்பாய் வடிவமணிகள் கிடைத்துள்ளன. இத்தகைய மணிகள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளதன் வாயிலாகத் தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் இவ்விரு பகுதிகளில் இருந்துள்ளன என்று சான்றுபகரலாம்.

**நிறைவாக**

தமிழர்களின் பண்பாட்டை அறிய அகழாய்வுகளில் கிடைத்த, கிடைத்துவரும் பொருட்கள் பெருந்துணையாக விளங்குகின்றன.

**துணைநின்றவை**


1. பரிபாடல், என்சி.பி.எச். வெளியீடு,சென்னை–600 098.
2. மு, காமாட்சி, சங்ககாலம் –தொல்பொருள் ஆய்வுகள், என்சி.பி.எச். வெளியீடு, சென்னை–600 098.
3. நிவேதா லூயிஸ், ஆதிச்ச நல்லூர் முதல் கீழடி வரை, கிழக்குப்பதிப்பகம், சென்னை
4. இந்து தமிழ் திசை நாளிதழ்
5. tamildigitallibrary
6. https;//www. kizhakkutoday.in
7. https;ta.m.wikipedia.org.wiki
8. www. bbc.com> tamil >india
9. https://tamil.oneindia.com/news/tamilnadu/jallikattu-linked-to-ancient-tamil-culture-through-keezhadi-findings-716517.html




# சங்ககால மக்களின் வாணிபம் முறைகள்


**முனைவர் ம.காயத்ரி**
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி.
பொள்ளாச்சி.


சங்ககாலத் தமிழகம் பொருளியல் வளர்ச்சி பெற்றுச் செல்வச் சிறப்புடன் விளங்கியதென்றால் அதற்கு அக்காலத்தில் விறு விறுப்புடன் நடைபெற்ற உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம் ஒரு முக்கிய காரணமாகும். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஓரிடத்தில் உற்பத்தி செய்து விட முடியாது. அதுபோல் மக்களும் தங்கள் தேவைகள் அனைத்தையும் தாங்களே படைத்திட இயலாது. சிலர் சில பொருட்களைத் தான் மிகுதியாக உற்பத்தி செய்ய முடியும். பலர் இன்றியமையாப் பொருட்களுக்குக் கூட பிறர் கைகளையே எதிர்பார்த்து நிற்க வேண்டியதாய் இருக்கும். மிகுதியைக் கொடுத்துத் தேவையானவற்றைப் பெறுதல் என்பது பண்டைய சமூக வாழ்வின் தவிர்க்க இயலா ஒரு பொருளியல் நடவடிக்கையாகும். அந்நடவடிக்கையிலிருந்து தான் விற்றல் வாங்கல் என்ற வழக்கம் உருவானது. இதுவே வாணிபமாக வளர்ச்சியுற்றது.

உழவினால் விளைவிக்கப்படும் பொருட்களையும் கைத்தொழிலாற் செய்யப்படும் உற்பத்திப் பொருட்களையும், உள்நாட்டில் பகிர்ந்தளிக்கவும், உள்நாட்டு அரிய பொருட்களை வெளிநாட்டிலும், வெளிநாட்டு இன்றியமையாப் பொருட்களை உள்நாட்டிலும் விநியோகிக்கவும், பெரும் பொருளீட்டிச் செல்வத்தைப் பெருக்கவும் வாணிபம் இன்றியமையாப் பொருளியல் சாதனமாயிற்று. இது ஒரு நாட்டின் பொருளாதார நிலையைக் கணக்கிடும் ஓர் அளவு கோலாகும்.

**உள்நாட்டு வாணிபம்**

சங்ககால உள்நாட்டு வாணிபத்தில் இருவகையான அங்காடிகள் இருந்தன. அவை 1. நாளங்காடி 2. அல்லங்காடி ஆகும். நாளங்காடி என்பது பகல் நேரத்தில் இருந்த அங்காடியாகும். அல்லங்காடி என்பது இரவு நேர விற்பனைக் கூடமாகும். இந்த விற்பனைக்கூடங்கள் பெரும்பாலும், புகார், மதுரை போன்ற நகரங்களில் இருந்ததாகத் தெரிகின்றது. மதுரையில் அங்காடிகளில் வியாபாரம் நடந்த விதத்தையும், அங்குக் கூடியிருந்த மக்களது கூட்டத்தையும் பற்றி மதுரைக் காஞ்சி சிறப்பாகக் கூறுகின்றது. வணிகர்கள் எங்கு வியாபாரம் செய்யச் சென்றாலும் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். இதற்குக் காரணம் பெரும் சாலைகளில் திருடர் பயம் அதிகமாக இருந்தது. இதனால் வணிகர்கள் “வணிகச் சாத்து” என்ற குழுக்களை ஏற்படுத்திக் கொண்டனர். வாணிபத்தில் நாணயம், நேர்மை காட்டப்பட்டது. நாணயமாக வணிகம் இருந்ததால் பொருளீட்டுதலும் சிறப்பாக இருந்தது.

**பண்டமாற்று**

ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக இன்னொரு பொருளை வாங்குவதே பண்டமாற்று முறையாகும். சங்க காலத்தில் வாங்கல் விற்றல் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றது. யார் யார் என்னென்ன பொருட்களை எவ்வாறு பண்டமாற்று செய்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. கிராமங்களுக்குள் நடந்து வந்த பண்டமாற்று வாணிபம் ஊர்களைத் தன்னிறைவு பெற்றவையாக வைத்திருந்தது.

உணவுப்பொருளான நெல் நல்லதொரு பண்டமாற்றுப் பொருளாகப் பயன்பட்டது. இடையன் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியத்தை மாற்றிக் கொண்டான். வேடன் தான் வேட்டையாடிக் கொண்டு வந்த மானிறைச்சியை உழவனிடத்தில் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லை மாற்றிக் கொண்டான். உப்பு வணிகர்களும் நெல்லைப் பெற்று உப்பைக் கொடுத்தனர். உப்பு வணிகர் உமணர் எனப்பட்டனர். உமணர் ஊர் ஊராகத் திரிந்து வாணிபம் செய்தனர். பிற நாட்டில் விளைந்த உப்பையும் வாங்கி



வாணிபம் நடத்தினர். (புறம். 35) மருத நிலத்திலிருந்து கிராமங்களுக்குள் வந்த வேட்டுவர்கள் மான் கறியைக் கொடுத்து வெண்ணெய் பெற்றுச் சென்றனர். (பட்டினப்பாலை.284) ஆய்மகள், தயிருக்கு மாற்றாக நெல் பெற்றாள். பரதவ மகளிர் மீனுக்கு ஈடாக நெல்லையும், பயிற்றையும் பெற்றனர். (ஐங்குறுநூறு 47) அது போல் பூவிற்ற பெண்களும் பூவை நெல்லுக்குப் பண்டமாற்று செய்தனர். (புறம். 168)

கள் உண்ணும் பொருட்டு மக்கள் தங்கள் மிகுதிப் பொருட்களை மதுபானக் கடையில் கொட்டினர். வேடர் தேனையும், கிழங்கையும் கொண்டு வந்து மதுபானக் கடைகளில் மாற்றி அதற்கு மாறாக வறுத்த மீன் இறைச்சியையும் மதுவையும் வாங்கி உண்டனர். மீனவர்கள் முத்துச் சிப்பிகளையும், எயினர் யானைத் தந்தங்களையும் கொடுத்து கள் உண்டனர்.

இவ்வாறு சாதாரண மக்கள் தங்கள் குலத் தொழில் மூலம் கிடைத்த உபரிப் பொருட்களைக் கொடுத்துத் தாங்கள் விரும்பிய பொருட்களைப் பெற்றனர்.

**காசு (நாணயம்)**

சிறிய அளவில் பண்டமாற்று முறையில் வாணிபம் நடைபெற்றபோது பெரிய அளவிலான வாணிபம் காசுகள் மூலமே நடைபெற்றது. பெரிய பட்டினங்களிலும், நகரங்களிலும் காசு கொடுத்துப் பொருளை வாங்கும் வழக்கமிருந்தது. அங்குச் செம்பு. வெள்ளி, பொன் நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. அக்காசுகள் நெல்லிக்காயின் வடிவம்போல உருண்டு சிறிது தட்டையாக இருந்தன. (புறம்.393) இவைகளன்றி கடல் கடந்த கப்பல் வாணிபத்தின் மூலமாக ரோமானிய (atd) நாணயங்களும் தமிழ் நாட்டில் புழக்கத்திலிருந்தன. இக்காசுகள் மதுரை, தஞ்சை, கோவை, சென்னை, தென்னாற்காடு மாவட்டங்களில் அதிகம் கிடைத்துள்ளன. இக்காசுகள் கி.மு. முதலாம் நூற்றாண்டில் ரோமாபுரியை ஆண்ட அகஸ்டஸ் காலம் தொடங்கி டைபீரியஸ், க்ளாடியஸ், மார்க்ஸ், அரிலஸ், ப்யாடோஷியஸ் டொமிட்டன், டியோடிஸியஸ், டியோக்ளாடியஸ் ஆகியோர் காலத்துக் காசுகளாகும். இவை கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 4–ஆம் நூற்றாண்டு

வரை வெளியிடப்பட்டவையாகும். (மலைப்படுகடாம் 105–144) அண்மையில் இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளத்தில், தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறையால் நடத்தப்பட்ட ஆய்வில் இதுவரை மூன்று ரோமானியக் காசுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று வாலன்டியன் காலத்தையும் மற்றொன்று டியோடிஷியஸ் காலத்தையும், மூன்றாவது ஆர்க்கேடியஸ் காலத்தையும் சேர்ந்தவையாம். இவற்றின் காலம் கி.பி. 4–ஆம் நூற்றாண்டாகக் கருதப்படுகின்றது. (பொருநராற்றுப்படை 154–155) திருக்கோவிலூருக்கு அருகே கிடைத்த புதையலில் நிரோச்சர் (கி.பி. 54–68), ஹாரியன்ஸி (கி.பி117 128), ஆஸ்பேர்ஸியஸ் (கி.பி. 138–161) ஆகிய மன்னர் தம் காலத் தங்கக் காசுகள் கிடைத்துள்ளன. (பெரும்பாணாற்றுப்படை 155–160) கோவை மாவட்டம் திருப்பூரில் ரிபப்ளிகன் காலத்திய (கி.மு. 2–1 நூற்றாண்டுகள்) நாணயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1992–இல் கி.மு. 69–ஆம் ஆண்டைச் சேர்ந்த ரோம வெள்ளி நாணயம் கண்டுபிடிக்கப்பட்டது. கரூருக்கு அருகே கிரேக்க, பொனிஷிய, செலூசிட் நாட்டு நாணயங்கள் கிடைத்துள்ளன. (குறுந்தொகை 67) இவற்றையெல்லாம் வைத்து, டாலமி, பெரிப்லூஸ் போன்றோரின் கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கின் அக்காலத்தில் நடைபெற்ற நம் நாட்டில் வெளிநாட்டு வாணிபச் சிறப்பைக் காணமுடிகின்றது.

**பண்டக சாலையும், கலங்கரை விளக்கமும்**

சங்ககாலத் துறைமுகங்களில் பண்டகசாலைகளும் கலங்கரை விளக்கங்களும் இருந்தனவாகச் செய்திகள் கூறுகின்றன. இன்னும் திருநெல்வேலிக்கு அருகிலுள்ள சங்ககாலத்தில் புகழ் வாய்ந்த துறைமுகமான கொற்கையின் ஒரு பகுதி அஃகசாலை என்றே அழைக்கப்படுகின்றது. கடலோரங்களில் வெளிநாட்டிலிருந்து வந்த பொருட்களை உள்நாட்டுக்கு எடுத்துச் செல்லவும், உள்நாட்டுப் பொருட்களைக் கப்பலில் ஏற்றவும், பொருட்கள் குவித்து வைக்கப்பட்ட இடம் பண்டக சாலையாகக் கருதப்பட்டது. முசிறி துறைமுகத்தில் கேரளத்தில் விளைந்த மிளகு குவித்து வைக்கப்பட்ட செய்தி தெரிய வருகின்றது. பேரியாற்றைக் கடந்து பொன்னோடு வந்த யவனரின் கலங்கள் மிளகை ஏற்றிக் கொண்டு திரும்பினவாம். எகிப்திலிருந்து



இறக்குமதியான பொருட்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் குவிக்கப் பட்டன. இரவில் கலங்கள் திசை மாறிச் செல்லாமல் நெறிப்படுத்த அக்காலத்தில் கலங்கரை விளக்கங்கள் அமைக்கப்பட்டன என்பதை அறியமுடிகின்றன.

**போக்குவரத்துச் சாதனங்கள்**

வாணிபப் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்ல பல மிருகங்களைப் பயன்படுத்தினர்.

1. அத்திரி எனப்பட்ட கோவேறு கழுதை.
2. குதிரை: இது பெரும்பாலும் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகிப் போர்க்களங்களிலே பயன்படுத்தப்பட்டது. சிறு பகுதியே வண்டியிழுக்கப் பயன்படுத்தப்பட்டது.
3. மாடும், மாட்டு வண்டியும்: வாணிபப் பண்டங்களைப் பெரும்பாலும் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு கூட்டம் கூட்டமாகச் சென்றனர்.
4. கழுதை: பாறைகளும் குன்றுகளுமாயுள்ள பகுதிகளுக்குச் சரக்குகள் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டன. பலாப்பழ அளவாகச் சிறுசிறு பொதிகளாகக் கட்டப்பட்ட மிளகு மூட்டைகளைக் கழுதைகளின் மேல் ஏற்றிச் சென்றதாகப் பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளன.

**வணிகச் சாத்து**

வணிகர் பலர் ஒன்றாகச் சேர்ந்து பொருட்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு போயினர் . இவ்வணிகர் கூட்டத்திற்கு வணிகச் சாத்து என்று பெயர். வாணிபப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன் அவர்கள் நாள் நிமித்தம் பார்த்து நல்லவேளையில் புறப்பட்டனர். காட்டுவழிகளில் வழிப்பறிக் கொள்ளைக்காரர் பற்றிய பயமிருந்ததால், தங்களுக்குத் துணையாக வில்வீரர்களையும் உடனழைத்துச் சென்றனர். இவ்வணிகச் சாத்துக்களின் தலைவன் "மாசாத்துவான்" எனப்பட்டான். கோவலனுடைய தந்தை காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள மாசாத்துவர்களில் ஒருவன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**கடல் வாணிபம்**

நாவாயில் (கப்பலில்) வாணிகம் செய்தவர்கள் நாலிகர் எனப்பட்டனர். பெருமளவில் கடல் வாணிபம் செய்தவர்கள் மாறாலிகர் எனப்பட்டனர். இதுவே மருவி "மாறாலிகள்" வழங்கியது. கண்ணகி, காவிரிப்பூம்பட்டினத்து மாறாலிகள் ஒரு மகள் என்பது குறிப்பிடத்தக்கது. சிறுபடகுகளில் ஆறுகளிலும் கரையோரங்களிலும் சரக்குகளை ஏற்றிச் சென்றனர். பாய்மரக் கப்பல்களில் சரக்குகளை ஏற்றி மேற்கில் இத்தாலி, கிரேக்க நாடுகளுடனும், கிழக்கில் சாவகநாடு, பர்மா வரையிலும் வாணிபம் செய்தனர். கடலில் பாதுகாப்புடன் பயணம் செய்ய மணிமேகலா தெய்வத்தை வழிபட்டனர். கிழக்குக் கடற்கரையில் உள்ள துறைமுகப்பட்டினங்களில் கரையோர வாணிபம் நடைபெற்றது. கொற்கை, தொண்டி, பூம்புகார், சோபட்டினம் முதலான தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து கரையோரமாக நாவாய்களைச் செலுத்தி நெல்லூர், கலிங்கப்பட்டினம் முதலான இடங்களுக்கும் சென்றனர். கங்கையில் முகத்துவாரம் வழியாகப் பாடலிபுத்திரம், காசிவரை சென்றனர். இதே போல் இலங்கைக் கரைக்கும் சென்றனர். கடல் வாணிபத்திற்கும் கடற்கொள்ளை யர்களால் இடையூறு ஏற்பட்டது. அவர்கள் கடற் குறும்பர் எனப்பட்டனர்.

**எட்டிப்பட்டம்**

வாணிபத்தில் பெருமளவு ஈடுபட்டுப் பெருஞ்செல்வத்தை ஈட்டிய மாசாத்துவர்களுக்கும் மாநாய்கர்களுக்கும் மன்னர்கள் எட்டிப் பட்டமும் எட்டிப் பூவும் அளித்துச் சிறப்புச் செய்தார்கள். எட்டிப்பூ என்பது பொன்னால் செய்யப்பட்ட தங்கப்பதக்கம் போன்ற அணி. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சாயலன் என்னும் வாணிகன் இவ்வாறு எட்டிப்பட்டம் பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. மற்றும் தருமதத்தன் என்னும் வாணிகன் மதுரை சென்று பெரும் பொருளீட்டிய போது மன்னன் பாண்டியன் அவனுக்கு எட்டிப்பட்டமும், பூவும் அளித்துச் சிறப்புச் செய்தான். நாளடைவில் வாணிபத்தில் ஈடுபடுவோர் தங்களை எட்டி எனச் சிறப்பித்துக் கொண்டனர். இச்சொல்லே "செட்டி" என்று மருவியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



**சுங்க வரி**

வாணிபத்திற்கு இவ்வாறு ஊக்கமளித்த அரசு சுங்கவரி விதித்து அதிலிருந்து வருவாயும் பெற முயன்றது. வணிகச் சாத்தர் செல்லும் வழிகளில் சுங்கச்சாவடிகள் இருந்ததென்றும், அங்கு வில்வீரர்கள் காவல் இருந்தனர் என்றும் பெரும்பாணாற்றுப்படை கூறியுள்ளது. காவிரிப் பூம்பட்டினத்தில் வரி செலுத்தியமைக்கு அறிகுறியாக சரக்குகள் மீது புலி முத்திரை பொறிக்கப்பட்டிருந்ததாகப் பட்டினப்பாலை கூறுகின்றது.

**அயல்நாட்டு வாணிபம்**

சங்க காலத்தில் தமிழர் தரை வழியாகவும் பாரத நாடு முழுவதும் சென்று வாணிபம் செய்தார்கள். உஜ்ஜெய்னி, கலிங்கப்பட்டினம், அமராவதி, பாடலிபுத்திரம், காசி முதலான வட இந்திய நகரங்களுக்கு வணிகர் சென்றனர். அதுபோல் கடல் கடந்த நாடுகளாகிய பாமா, கடாரம், சாவகம், இலங்கை (அநுராதபுரம்) ஆகிய நாடுகளுக்கும். சென்று வாணிபம் செய்தனர்.

தமிழக வணிகர் அயல் நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தது போலவே அயல்நாட்டு வணிகரும் தமிழகத்திற்கு வந்து வாணிபம் செய்தனர். தமிழகத்தின் முக்கிய துறைமுகமான காவிரிப்பூம்பட்டினத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்த கப்பல் வணிகர் வெவ்வேறு மொழிகள் பேசினர் என்று சங்கம் மருவியகால நூலான சிலப்பதிகாரம் கூறுகிறது.

சுமேரியாவில் உள்ள "ஊர்" என்ற இடத்தில் அகழ்வாராய்ச்சி செய்தபோது அங்குள்ள சூரியக் கடவுள் ஆலயத்தில் தேக்கு மர உத்திரங்கள் இருந்ததாகக் கண்டுபிடித்துள்ளனர். இத்தேக்குமரம் தமிழகத்தின் மேற்குக் கரையிலிருந்துதான் சென்றிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. ஒரு சில தமிழ்ச்சொற்கள் அப்பகுதி மக்கள் பேசிய மொழிகளில் வழங்கப்படுகின்றன. மென்துணியைக் குறிக்கும் ‘‘துகில்’ என்ற தமிழ்ச் சொல் ஹூப்ரு மொழியில் "துகி" எனப்படுகிறது. அரிசி என்பது கிரேக்க மொழியில் "ஒரிஸ்" எனப்படுகிறது. மயில் தோகை "தோக்" எனப்படுகிறது.

### அரபு வணிகர்

அரேபியர் இஸ்லாம் சமயத்தைத் தழுவுமுன்பே தமிழகத்துடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர். மேற்குக் கரையிலுள்ள துறைமுகமான முசிறிக்கு வந்தனர். அங்கு அவர்கள் தங்கிய இடம் "பந்தர்" எனப்பட்டது. பந்தர் என்றால் அரபு மொழியில் கடைவீதி என்று பொருள். அவர்கள் முத்து, மூங்கில், மிளகு ஆகியவற்றை இங்கிருந்து வாங்கிச் சென்று செங்கடல் துறைமுகங்களில் கொண்டுபோய் விற்றார்கள்.

### யவன வணிகர்

இந்தியாவிற்கு வந்து வாணிபம் புரிந்த கிரேக்கரும், ரோமானியரும் யவனர் எனப்பட்டனர். கி.மு. முதலாம் நூற்றாண்டில் ரோமானியர் மத்திய தரைக்கடலில் உள்ள முக்கிய துறைமுகப்பட்டினமான அலெக்சாண்டிரியாவைக் கைப்பற்றிக் கொண்டபின் கீழை நாட்டு வர்த்தகம் அவர்கள் கையில் விழுந்தது. அதன்பின் தமிழகத்துடன் யவனர்கள் விறுவிறுப்பான வாணிபம் செய்யத் தொடங்கினர். அதற்கான சான்றுகள்:

1. தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ரோமானிய நாணயங்கள்
2. புதுச்சேரிக்குத் தெற்கேயுள்ள அரிக்காமேடு என்ற இடத்தில் செய்யப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சி மூலம் அங்கு ரோமானியப் பண்டகசாலை, தொழிற்சாலை இருந்ததாகத் தெரியவந்துள்ளது. யவனர் மதுச்சாடிகள் பல அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
3. யவன வீரர்கள் பலர் பாண்டிய மன்னரின் மெய்க்காவலராகப் பணியாற்றினர் எனச் சங்கஇலக்கியம்கூறுகின்றது.
4. கிரேக்க மதுவகைகள், விநோதமான வடிவங்களையுடைய கலங்கள், விளக்குகள் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. (உம்)

   **“யவனர், நன்கலம் தந்த தண் கமழ் தேறல்”**
   **“யவனர் இயற்றிய வினைமாண் பாவை”**



சங்ககாலத் தமிழகம் பொருளாதார வளர்ச்சியில் வாணிபம் முக்கிய பங்கு வகிக்கின்றது. துறைமுகப் பட்டினங்களும் கலங்கரை விளக்கங்களும் அமைத்து உதவிய அரசு, அதற்கு ஈடாக சுங்கவரிகளைப் பெற்றது. இவ்வரியொன்றினைத் தவிர வேறு சுரண்டல்களையோ இடையூறுகளையோ அரசு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு வர்த்தகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றபோது, அயல்நாட்டு வர்த்தகம் நாணய மாற்று முறையில் நடைபெற்றது. ரோமானியப் பேரரசின் கருவூலம் காலியாகும். அளவிற்குத் தங்க நாணயங்கள் தமிழ் நாட்டில் செலாவணியாயின. உள்நாட்டில் வெல்லம், கள், துணி, உப்பு போன்றவை முக்கிய வர்த்தகப் பொருள்களாக வாங்கப்பட்டன. வாணிபத் தொடர்பு மட்டுமன்றிப் பண்பாட்டுத் தொடர்பும் வெளிநாட்டவருடன் இருந்ததற்கான ஆதாரங்கள் அண்மைக்கால ஆய்வுகள் மூலம் தெரியவருகின்றன.

### துணை நூற்பட்டியல்

நற்றிணை,

புறநானூறு,

ஐங்குறுநூறு,

நற்றிணை

பட்டினப்பாலை

அகநானூறு,

பெரும்பாணாற்றுப்படை

நெடுநல்வாடை

பொருநராற்றுப்படை